இந்த விளக்கப்படத்தில் உள்ள கி.பி வருடங்கள், தோராயமாக கணிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வின் சரியான காலத்தை கணிப்பதில் வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போவதில்லை. கிறிஸ்த்தவ பண்டிதர்கள் மற்றும் எழுத்தாளர்கள் மத்தியிலும் இதே நிலைதான் (உஷர், ஜார்விஸ், நியூட்டன், கிளிண்டன், பிரௌன், அன்ஸ்டெய் மற்றும் பாணின்).

வேதப்புத்தகத்தில் உள்ள தகவலுடன், ஆதாமின் படைப்பில் இருந்து காலவரிசையின் சுவடுகலை ஆராய்வதன் மூலம் வரலாற்று நிகழ்வுகளின் சரியான காலத்தை உறுதிப்படுத்த இயலும்.

புகழ் பெற்ற எகிப்த்திய எழுத்தாளர் "கிளாடியஸ் தாலமஸ்" (தாலமி) இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். (சைரஸ் மன்னராட்சியில் இருந்து 700 வருடங்களுக்குப் பிறகு).

இவர் தனது "தாலமிய வானியல்" என்ற புத்தகத்தில், பாரசீக இராஜ்ஜியத்தில் சைரஸ் முதல் மாசிடோனியாவின் மாவீரன் அலெக்சாண்டர் வரையிலான மன்னர்களின் வாழ்ந்த காலத்தையும் அவர்கள் ஆண்ட காலத்தையும் தோராயமான அளவீடாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த கால குறிப்பீட்டின் துல்லியத்தை சரிபார்க்க இயலவில்லையெனினும், சில வரலாற்றாசிரியர்கள் இது வேதப்புத்தகத்தில் உள்ள வரலாற்று நிகழ்வுகளை சார்ந்தது இல்லையென்றும் மற்றும் சிலர், பாரசீக இராஜ்ஜியத்தில் இல்லாத மன்னர்களை இருந்ததாக எண்ணிய தவறான கணிப்பால் , அதன் காலவரிசையில் கூடுதலாக 80 வருடங்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர்.

தாலமியின் கணிப்பில் சைரஸ் மன்னராட்சி (டேரியஸ் மற்றும் மீடி மன்னர்கள் ஆண்ட அதே காலம்) முதல் செர்கஸ் வரை பாரசீக இராஜ்ஜியத்தில் பத்து மன்னர்கள் இருந்ததாகவும் அவர்கள் மொத்தமாக ஆண்ட காலம் 205 வருடங்கள் என்று கருதினார். எனினும் மற்ற வரலாற்றாசிரியர் கணிப்பின்படி ஆறு மன்னர்கள் இருந்ததாகவும், வேதத்தில் ஐந்து பாரசீக மன்னர்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தானியேல் 10:1 ; 11:2.).

யூத மற்றும் பாரசீக பண்டபாடுகளின்படி, பாரசீக இராஜ்ஜியம் 52 வருடங்கள் மட்டுமே நீடித்தது. வேதம் பயிலும் இறையியலாளர், தானியேலின் 70 வாரங்கள் பற்றிய தீர்க்கதரிசனத்தின் முதல் 69 வாரங்கள் கொண்ட வருடங்கள் (483 வருடங்கள்) சார்பான தங்களின் கணக்கீடுகளுக்கும், விளக்கங்களுக்கும் தாலமியின் காலவரிசையை அடிப்படையாக பயன்படுத்திகின்றனர்.

திருத்தந்தை 13-ஆம் கிரகோரி, 1582-ஆம் வருடம், 365.25 நாட்கள் அடிப்படையிலான புதிய கால அட்டவணை/நாட்காட்டியை அறிமுகப்படுத்தினார். இது அச்சமயத்தில் பயன்பாட்டில் இருந்த ஜூலியன் நாட்காட்டியின் மாற்றாக அமைந்தது.

மோசே காலத்தில் யூதர்கள் பின்பற்றிய நாட்காட்டியில் ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் வீதம், ஒரு வருடத்திற்கு 365 நாட்கள் இருந்தது. இதில் 6-ஆம் (எலூள்) மற்றும் 12-ஆம் (அடர்) மாதங்களுக்கு மட்டும் தலா 2 மற்றும் 3 நாட்கள் கூடுதலாக இருந்தது 32 & 33). இதில் வாரத்தின் அடிப்படையில் வழக்கமான சாபத் பின்பற்றப்படவில்லை. (உதாரணமாக, ஒரு வருடத்தின் ஒவ்வொரு சனிக்கிழமை).

ஆனால் வேதத்தின்படி, சாபத் என்பது ஒரு வருடத்தின் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே எனவும் இந்த காலவரிசையை ஒவ்வொரு வருடமும் மாறக்கூடியது எனவும் நாம் காண்கிறோம். (கிரெகோரியின் நாட்காட்டிக்கு எதிர்மாறாக). 1260 நாட்கள் மற்றும் 1290 நாட்கள் மற்றும் 42 மாதங்கள் பற்றி வேத குறிப்புகளின்படி, தீர்க்கதரிசன வருடம் என்பது 360 நாட்கள் (ஒரு மாதத்திற்கு 30 நாட்கள்) என்று இறையியல் பயிலும் மாணவர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது.

நாம் கூட ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் மட்டுமே என்ற கணிப்பில் இருந்ததுண்டு. "360 நாட்கள் கொண்ட தீர்க்கதரிசன வருடம்" என்ற அனுமானத்தின் விளைவால் உருவான கால இடைவெளிகளை பூர்த்தி செய்யும் வண்ணம், வரலாற்றாசிரியர்கள் கிரகணங்கள் மற்றும் வானியல் கணக்கீடுகளை மையமாக வைத்து தங்கள் கணிப்புகளைப் புகுத்தினர்.
கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னதான வரலாற்று நிகழ்வுகளை கணிப்பதில் மனிதனின் காலவரிசை எந்த அளவுக்கு நம்பக்கூடியது? மனிதன் பல்வேறு வகையான கால அளவீடுகளைப் பயன்படுத்தியதால், ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வின் சரியான காலத்தை கணிப்பதில் பல தரப்பினரின் முரண்பாடான கருத்துக்கள் இருப்பதற்கு, பின்வரும் சில எடுத்துகாட்டுகள் சான்றாக அமைகின்றன.

1. கிசாவின் பெரிய பிரமிடு கட்டப்பட்டது - பெரும் பிரளயத்திற்கு முன் ? / பின் ?


2. பத்து பழங்குடியினரின் கிளர்ச்சி(சாலோமோன் மரணத்திற்கு பின்) நடந்த காலம் - கி.மு 975 ? கி.மு 931 ? கி.மு 903 ?

3. இஸ்ரேயலின் வடக்கு இராஜ்ஜியம் அசிரியர்களால் வீழ்த்தப்பட்ட காலம் - கி.மு 732 ? கி.மு 640 ?

4. எஸ்தர் 1:1 அஸ்தியாகேஸ் என்கிற ஆஹாசுர்ஸ் தானியேல் 5:31 மேதியனாகிய தரியு, இவ்விரு பெயர்களும், ஏசாயா 44:28-45:1 தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிய சைரசின் தந்தையாகிய ஒரே நபரைக் குறிப்பிடுகிறதா ? அல்லது வலிமைமிக்க செர்கசிற்குப் பிறகு அரசாண்ட தானியேல் தரியு ஹிஸ்டாஸ்பெஸ் என்பவரா ?

5. எஸ்தரின் வாழ்வியல் நடந்த காலம் , சைரஸ் ஆணைக்குப் பிறகா அல்லது முன்பா ?

எனினும் வேத தீர்க்கதரிசனங்கள், எல்லாம் வல்ல நம் தேவன் நியமித்த திட்டத்தின்படி துல்லியமாக அவர் தாம் முன்குறித்தபடியே, ஏற்ற காலத்தில் நிறைவேறுகின்றது.
நம் தேவன் படைப்பின் தொடகத்திலிருந்தே, மெசியாவின் வருகையை பறைசாற்றுவதை நாம் காண்கிறோம்
கிறிஸ்துவுக்குள் அங்கமாகிய நாம், அவரின் வருகையின் வாயிலாக, நித்திய வாழ்வின் விடியலுக்காகக் காத்திருக்கிறோம்.
தேவனின் வார்த்தை சத்தியமும், நிச்சயமுமாம். ஆமென். [தற்போதய எபிரேய நாட்காட்டி, கி பி 359 ஆண்டில் வரையறுக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது




| A.H. 2083 B.C. 1920 | A.H. 2107* B.C. 1896 | A.H. 2369 B.C. 1634 | A.H. 2537 B.C. 1466 | A.H. 2577 B.C. 1426 | A.H. 3052* B.C. 951 | A.H. 3089 B.C. 914 |
|---|---|---|---|---|---|---|

↑ பாபேல் கோபுரம், நிம்ரோத் மன்னனால் கட்டப்பட்டது.
- ஆதாம் வம்சாவழியின் 13-ஆம் தலைமுறையில்
- பேலேகு வாழ்நாளில் (ஆதியாகமம். 10:25)

12 ———— 50

## ஆதியாகமம் 9 ------ 11

"இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்" – ஆதி. 9:19

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி *[அதாவது, நோவாவும் அவரது மனைவியும்]* பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.". –அப்போஸ்தலர். 17:26
---------------

## ஆதியாகமம்

கர்த்தர் ஆபிராமை அழைத்து வாக்குறுதி கொடுத்தபோது ஆபிராமுக்கு 75 வயது. - ஆதி. 12:4. கர்த்தர் ஆபிராகாமுடன் உடன்படிக்கை செய்தபோது ஆபிராமுக்கு 99 வயது. (ஆதி. 17 - ஒப்பிட்டுப்பார்க்க. கலாத்தியர் 3:16-17)

யோசேப்பின் மரணத்துக்கு பிறகு எகிப்திய கொத்தடிமைத்தனம் தொடங்கியது. - B.C 1634. ஆபிராகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கும், விடுதலைப் பயணத்திற்கும் (யாத்திராகமம்) இடைப்பட்ட காலம் 430 வருடங்களாகும்.

விடுதலைப்பயணத்தின் விளைவாக , 365 நாட்கள் கொண்ட வருட நாட்காட்டியை பின்பற்ற தொடங்கினர். 3-ஆம் மாதத்தின் 15-ஆம் நாள், சீனாய் மலையில் இந்த சட்டம் கொடுக்கப்பட்டது. (அதாவது, அவர்கள் பஸ்கா இரவில் எகிப்தை விட்டு வெளியேறி இரண்டு மாதங்களுக்குப் பிறகு)

40 வருட வனாந்திரப்பயணத்திற்குப் பிறகு, இஸ்ரேல் கானான் தேசத்திற்குள் ஊடுருவிப் படையெடுத்தது. அவர்கள் வெற்றி பெற்று பகுதிகளைப் பிரித்துக்கொண்டனர். அக்காலத்திலே, மிகவும் கடுமையான அடக்குமுறை மற்ற தேசங்களில் இருந்தது.

சாலமோனின் 4-ஆம் வருட ஆட்சியில், ஆலயத்தின் அடித்தளம் அமைக்கப் பட்டது.

சவுல், தாவீது மற்றும் சாலமோன் என்ற மூன்று மகா ராஜாக்கள், இஸ்ரேல் தேசத்தை 120 வருடங்கள் ஆட்சி செய்தனர். தலா 40 வருடங்கள், இஸ்ரேல் இரண்டாக பிரிக்கப்படும் முன்.
"உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" என்று தேவன், தாவீது ராஜாவுடன் ஒரு உடன்பகிக்கை செய்தார்.
2 சாமுவேல் 7:12-13 , 1 கொரிந்தியர் 22:12-13; 28:6-9).
அவரது மகன் சாலமோன் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றார். தீர்க்கதரிசனத்தினிமித்தம், அந்த உடன்படிக்கை, யூத குலத்திலிருந்து எழுந்த இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது.



CREATED & PRODUCED BY RICHARD L. S. GAN • PROPHETIC*REVELATION GHIM MOH P. O. BOX 333 REPUBLIC OF SINGAPORE 912742 • © 1993, 2012